# 11 சங்கப் பாடல்கள்

## 1. குறுந்தொகை

குறுந்தொகை என்றால் குறுகிய அடிகளைக் கொண்ட பாடல்களின் தொகுப்பு. நான்கு அடி முதல் எட்டு அடிவரை கொண்ட பாடல்கள் இதில் காணப்படுகின்றன. எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணைக்கு அடுத்ததாகத் தொகுக்கப் பெற்றதாக கருதப் படுகின்றது. இந்நூல் கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 அகத்திணைச் செய்யுளைக் கொண்டது.

மருதம் - தோழி கூற்று

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்துஇன் புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்துஇன் புறூஉம் இளையோர் போல்
உற்றுஇன் புறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்துஇன் புற்றனெம் செறிந்தன வளையே.

**தும்பிசேர் கீரன்**



தோழி தலைமகள் வாயில்கட்கு உரைத்தது.

தச்சனால் செய்யப்பெற்ற சிறுகுதிரை பூட்டிய கைவண்டியை ஏறிச் செலுத்தி இன்பம் பெறாவிடினும் கையால் இழுத்து இன்பம் அடையும் இளம்பிள்ளைகளைப் போலத் தலைவனது மெய்யுற்று இன்பம் பெறாவிடினும், நல்ல தேரையும் பொய்கையையும் உடைய ஊர்க்குத் தலைவனது நட்பை எம் உள்ளத்தே மென்மேலும் பெருகச் செய்து இன்பம் உற்றேன். அதனால் வளைகள் கழலாமல் கையின்கண் இறுகி அமைந்துள்ளன.

தோழி தனக்கும் தலைவிக்கும் உள்ள ஒற்றுமை பற்றி, 'உற்று இன்புறோம் ஆயினும்... செய்து இன்புற்றனெம்' எனப் பன்மையால் கூறினாள். தலைவன் தன்னிடத்திற்கு வராமலிருக்கவும் வந்தது போன்ற இன்பத்தைப் பெறுதலினால் அவன் வந்து செய்யத்தக்கது ஒன்றுமில்லை என வாயில் மறுத்தாளாயிற்று.

★ குறுந்தொகை குறைந்த அடியளவுடைய பாடல்கள் கொண்ட தொகுப்பு நூல்.
★ தொகுத்தவர் பெயர் அறியப்படவில்லை.
★ கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது.
★ ஏறத்தாழ 250 புலவர்களால் பாடப் பெற்றது.
★ பாடியவர் பெயர் அறியப்படாத 10 பாடல்கள் உள்ளன.
★ குறித்ததொரு ஒழுங்குமுறையில் இவை தொகுக்கப்படவில்லை.
★ தரப்பட்ட பாடல் மருத நிலத்திற்குரியது.
★ ஊடல் ஒழுக்கம்
★ பரத்தையரிடம் சென்ற தலைவன்மீது ஊடல் கொண்ட தலைவிக்காக தோழி கூற்றாக அமைந்த பாடல்.

## வினாக்கள்

1. அ. பாடலை சந்தி பிரித்து எழுதுக.
   ஆ. இவ்வரிகளின் சிறப்பினை எழுதுக.

**தச்சன் செய்த சிறுமா வையம்**
**ஊர்ந்துஇன் புறாஅர் ஆயினும் கையின்**
**ஈர்த்துஇன் புறூஉம் இளையோர் போல்**
**உற்றுஇன் புறேஎம் ஆயினும்**

   இ. பாடலின் பொருளை எழுதுக.
   ஈ. பின்வரும் சொற்களின் பொருளை தேடியறிக.

★ சிறுமாவையம் ★ ஊர்ந்துஇன்புறார் ★ கேண்மை ★ செறிந்தன வளையே

2. சங்கப் பாடல்களில் குறுந்தொகை எனும் தலைப்பில் 100 சொற்களில் கட்டுரை எழுதுக.

# 2. புறநானூறு

புறநானூறு எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அகத்திணைக்குள் அடங்காத அனைத்தும் புறத்திணை எனப்படும். முக்கியமாக சங்ககாலத்தில் தமிழ் நாட்டினை அரசாட்சி செய்த மன்னர்களின் வீரம், ஆட்சித்திறன், கொடைச்சிறப்பு, போர், தோற்றப்பொலிவு போன்றவற்றையும் சங்கப் புலவர்களின் நற்குணங்களையும் தெளிவாக எடுத்து இயம்புபவை புறநானூற்றுச் செய்யுள்களாகும்.

இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்யுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் திழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர் சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர் நணிப் படிகோ டேறிச் சீர் மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.

**தொடித்தலை விழுத்தண்டினார்**

ஒல்லையூர் : இது கோனாட்டிலுள்ள ஒலியமங்கலமென்னும் ஊர்.

சில்வளை விறலியென்றது, பல்வளையிடுவது பெதும்பைப் பருவத்தாகலின், அஃதன்றிச் சில்வளையிடும் பருவத்தாளென அவள் ஆடல் முதலிய துறைக்குரியளாதல் கூறப்பட்டது. (பதிற். 57: 6 உரை)

**பொருள்:-** இப்பொழுது நினைந்து இரக்கமாகா நின்றது. செறிந்த மணலிடத்துச் செய்யப்பட்ட வண்டற்பாவைக்குப் (வண்டற்பாவை விளையாடுதற் பொருட்டு மண்ணாற்செய்த பிரதிமை) பறிக்கப்பட்ட பூவைப் பறித்துச் சூடிக் குளிர்ந்த பொய்கையின்கண் விளையாடும் மகளிரோடு கைகோர்த்து அவர் தழுவின இடத்தே தழுவி அசைந்த விடத்தேயசைந்து ஒளித்துச் செய்யுமஃதறியாத வஞ்சனையில்லாத இளமைந் தருடனேகூட உயர்ந்த கோடுகளையுடைய மருதினது துறையிலே வந்து உறத்தாழ்ந்து நீர்க்கு அண்ணிதாகப்படிந்த கொம்பிலே ஏறி அழகுமிகக் கரையிடத்து நிற்போர் வியப்பத் திரையிடத்துத் திவலையெழ ஆழத்தால் நெடிய நீரையுடைய

மடுவின்கண் துடுமென்று ஒலிப்பக் குதித்து மூழ்கி மணலை முகந்து காட்டிய கல்வியில்லாத இளமை இரங்கத்தக்கது. அவ்விளமை எவ்விடத்துண்டு கொல்லா பூண்செறிந்த தலையையுடைய பாரிய தண்டுக்கோலையூன்றித் தளர்ந்து இருமல் நெருங்கின சில வார்த்தையுடைய பெரிய முதுமையை யுடையேமாகிய எங்களுக்கு? எ - று.

எமக்கு இளமை யாண்டுண்டுகொல்லோ? அதுதான் இரங்கத்தக்கதெனக் கூட்டுக.

இளமை கழிந்து இரங்கிக்கூறுதலான் இதுவும் கையறுநிலையாயிற்று.

(குறிப்புரை) 1. இனியென்றது, இனிநினைந் திரக்கமாகின்றது என்றாற்போல் இப்பொழுது என்னும் பொருள் தந்தது (கலித் 1, ந.), இரங்கல்: என்னும் உரிச்சொல் இரக்கமென்றாகி ஒரு பொருளது கழிவாற் பிறந்த வருத்தமாகிய குறிப்புணர்த்தி நிற்குமென்பதற்கு மேற்கோள் : தோல். எரி. சூ.61 ஈ,ந. 1 - 3 புறநா. 11:1 - 4.

★ புறநானூறு கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலிய 400 அகவற் பாக்களை உடையது.

★ மூவேந்தர், சிற்றரசர், அமைச்சர், படைத் தலைவர், வீரர் முதலிய பலருடைய சரித்திரம், கடையெழுவள்ளல் சரித்திரம் கடைச்சங்கப் புலவர் வரலாறு என்பன புலப்படுத்தப்படுகின்றன.

★ இவர்களது வீரம், கொடை, அருட்திறம், ஆட்சிச் சிறப்பு ஆகியன பற்றி பேசப்படுகின்றது.

## வினாக்கள்

1. பாடலை சந்தி பிரித்து எழுதுக.
2. பாடலின் பொருளை எழுதுக.
3. பாடலில் காணப்படும் சிறப்புகளை விளக்குக.
4. பின்வரும் சொற்களுக்கான பொருள் தேடியறிக:

★ திணி மணல் ★ பாவை ★ திரையகம், ★ பிதிர ★ நெடுநீர்க்குட்டம்
★ கல்லாவிளமை ★ தொடித்தலை ★ விழுத்தண்டு

5. புறநானூற்றுப் பாடல்களின் சிறப்பு எனும் தலைப்பில் 100 சொற்களில் கட்டுரை ஒன்றை எழுதுக.